مجلس اڬام اسلام سيڠاڤورا
Majlis Ugama Islam Singapura
(Islamic Religious Council of Singapore)
Islamic Religious Council of Singapore • Singapore Islamic Hub • 273 Braddell Road • Singapore 579702 • www.muis.gov.sg • Tel: 6359 1199 • Fax: 6253 7572

**24 March 2020**

---

# கோவிட்-19ஐ கையாள்வதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஃபத்வா அறிக்கை

---

1. சிங்கப்பூரில் கொவிட்-19 கிருமிப் பரவலின் அண்மை நிலவரத்தை ஃபத்வா குழு கருத்தில் கொண்டுள்ளது. பள்ளிவாசல் மூடப்படுவதாக 12 மார்ச் 2020 அன்று அறிவிக்கப்பட்டபோது, இருந்த நிலவரத்துடன் (சுமார் 187 நோயாளிகள்) ஒப்பிடுகையில், 23 மார்ச் 2020 நிலவரப்படி நோயாளிகளின் எண்ணிக்கை 509 ஆக உயர்ந்ததோடு, இருவர் உயிரிழந்துள்ளனர். உலகெங்கிலும் நிலவும் கொவிட்-19 கிருமிப் பரவல் நிலவரத்தையும் ஃபத்வா குழு கவனத்தில் கொண்டுள்ளது. உலகெங்கிலும் நோயாளிகளின் எண்ணிக்கையும் உயிரிழந்தோரின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரித்துள்ளன. கொவிட்-19 நிலவரம் அதிக ஆபத்தாகி வருவதையும், நம்பிக்கையளிக்கும் எந்தவித முன்னேற்றமும் தென்படவில்லை என்பதையும் இது காட்டுகிறது. குறிப்பாக, பள்ளிவாசல்களில் வழக்கமாக நடைபெறும் தொழுகைக் கூட்டங்கள் மற்றும் வெள்ளிக்கிழமை தொழுகைகள் போன்ற பெரிய கூட்டங்களின் போது கிருமி தொற்றக்கூடிய அபாயம் இன்னும் நீடிக்கிறது. எனவே, நிலைமை சீரடைந்து, கிருமித்தொற்றின் எண்ணிக்கை கட்டுக்குள் வரும்வரை பள்ளிவாசல்களைத் தொடர்ந்து மூடி வைத்திருக்க ஃபத்வா குழு தீர்மானித்துள்ளது. சிங்கப்பூர் சுகாதார அமைச்சகம் மற்றும் சுகாதார வல்லுநர்கள் வழங்கிய அறிவுரையின் அடிப்படையில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

2. அனைத்து வகையான தீங்கும் ஆபத்தும் தவிர்க்க வேண்டும் எனக்கூறும் ஷரியாவின் மதக் கொள்கைகள் மற்றும் அடிப்படைகளுக்கு இணங்க இந்த ஃபத்வா வெளியிடப்படுகிறது. பின்வரும் கோட்பாடுகள் அவற்றுள் அடங்கும்: (அ) அனைத்து வகையான தீங்கு அகற்றப்படவேண்டும் (*al-dharar yuzāl*) (ஆ) ஆபத்து மற்றும் தீங்கு விளைவிக்கும் அனைத்து காரணத்தைக் குறைக்க வேண்டும் (*Sad al-Zarā`i`*). அதாவது,

தீங்கு நேரக்கூடிய சூழ்நிலையில், தனிநபர்கள் மற்றும் பொதுமக்களின் உயிரையும்[1] உடல்நலனையும் பாதுகாக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

3. தற்போதைய சூழ்நிலை, கொவிட்-19 கிருமிப் பரவலைக் கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் மனித உயிர்கள் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தும் அவசரநிலையாக கருதலாம். இந்நிலையில், சமூகத்தினரின் உயிரையும் நலனையும் பாதுகாப்பதே எங்களின் முதற்கடமை. முஸ்லிம்கள் தொடர்ச்சியாக மூன்று வெள்ளிக்கிழமை தொழுகைகளைத் தவறவிட்டாலும், வெள்ளிக்கிழமை தொழுகை கட்டாயமில்லை எனக் கருதப்படும். ஒரு மனிதர் அலட்சியமாக வெள்ளிக்கிழமை தொழுகையை தவறவிடக்கூடாது என்று அறிவிக்கும் ஹதீஸ் சாதாரண சூழ்நிலைகளுக்கானவை. தற்போது அதிகரித்து வரும் கோவிட்-19 கிருமித்தொற்று சூழலில் அது பொருந்தாது என்பதையும் ஃபத்வா குழு வலியுறுத்துகிறது.

4. கிருமிப் பரவல் சூழ்நிலையை எதிர்நோக்கும்போது, நபி (ஸல்) அவர்கள் வழங்கிய வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு, அதாவது, வீட்டில் தங்கி பொறுமையாக இருக்கும்படி ஃபத்வா கமிட்டி சமூகத்தினருக்கு அறிவுறுத்துகிறது. நபி (ஸல்) கூறியதாவது: பிளேக் எனும் கொள்ளை நோய் நிகழும் காலத்தில் அல்லாஹ்வின் அருளை எதிர்பார்த்து வீட்டில் பொறுமையாகத் தங்கியிருப்பதைத் தவிர வேறு வழியில்லை. மேலும், அல்லாஹ் அவருக்கு நாடியுள்ளதைத் தவிர வேறு எதுவும் அவருக்கு ஏற்படாது; அப்படியே அவருக்கு ஏதாவது ஏற்பட்டால் அவர் ”ஷஹீத்” (வீர தியாகியின்)[2] அந்தஸ்த்தைப்பெறுவார்.

5. எனவே, இன்று நமது முதற்கடமை நம் பாதுகாப்பையும் உடல்நலனையும், நமக்காகவும், நம் குடும்பத்திற்காகவும், சமூகத்திற்காகவும் பாதுகாப்பதே. அதே சமயத்தில், வீட்டில் நம் குடும்பத்துடன் தொழுகையைத் தொடரலாம். மனிதகுலம் முழுவதும் எதிர்நோக்கும் இச்சோதனையை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நீக்கி, இறை நம்பிக்கையுடன் இதனைக் கடந்து வர நமக்குப் பொறுமையையும் மனத்திடத்தையும் அளிக்கட்டுமாக!

---

[1] ஷரீஆ வின் அடிப்படையாக விளங்கும் ஐந்து முக்கிய கோட்பாடுகளில் ஒன்று உயிர்ப் பாதுகாப்பு. இது al-Daruriyat al-Khamsah (அத்தரூரியாத் அல்-கம்சா) எனப்படும்.
[2] இமாம் புகாரி, இமாம் அந்நஸயீ, இமாம் அஹ்மத் ஆகியோரால் அறிவிக்கப்பட்ட ஹதீது